பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 11 2024 MONDAY 7 15 PM

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாகவும், ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிகட்டமாகவும் நாளை மறுநாள் நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

- மணிப்பூர் நிலவரம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, இரண்டாவது நாளாக இன்றும் அதிகாரிகளுடன் புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

- நாட்டின் 56வது புலிகள் சரணாலயமாக சத்திஷ்கடில் உள்ள Guru Ghasidas Tamor Pangla அறிவிக்கப்பட்டுள்ளது..

- இலங்கை அதிபர் திரு. Anura Kumara Dissanayake அடுத்த மாதம் அரசுமுறைப் பயணமாக இந்தியா வருகிறார்.

- ஆசிய இளையோர் Climbing சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Joga Purty வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<<<<<<>>>>>>

மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாகவும், ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிகட்டமாகவும் நாளை மறுநாள் நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

பிஜேபி, காங்கிரஸ், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, தேசியவாத காங்கிரஸ், சிவசேனா மற்றும் அதன் பிரிவுகளைச் சேர்ந்த பிரிவுகள் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

தேர்தல் பிரச்சாரம் நிறைவடைந்ததன் காரணமாக, தொகுதிக்கு தொடர்பில்லாத நபர்கள் அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது, இந்த இரண்டு மாநிலங்களிலும் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

நைஜீரியாவின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது வளரும் நாடுகளுக்காக அவர் ஆற்றிய பணிக்காக கிடைத்த அங்கீகாரம் என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றது தமக்கு கிடைத்த பெருமை என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மணிப்பூர் நிலவரம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

மணிப்பூரில் அமைதியை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

தேவைப்பட்டால் கூடுதல் பாதுகாப்புப் படையை அனுப்புவது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மணிப்பூர் விவகாரம் தொடர்பாக திரு. அமித் ஷா, தொடர்ந்து இரண்டாவது நாளாக இந்த ஆலோசனையை மேற்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தேசிய இளையோர் விழா புதுதில்லியில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 11 மற்றும் 12ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளதாக மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா அறிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

இளையோர், தங்களது தொலைநோக்கு பார்வையை பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன் எடுத்துரைப்பதற்கான வாய்ப்பாக இது அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாட்டின் 56வது புலிகள் சரணாலயமாக சத்திஷ்கடில் உள்ள Guru Ghasidas Tamor Pingla அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வன மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. புபேந்திர யாதவ், சமூகவலைதளத்தில் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த புலிகள் சரணாலயம் 2 ஆயிரத்து 829 சதுர கிலோமீட்டர் தொலைவைக் கொண்டது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் இந்த அறிவிப்பு ஒரு மைல்கல் என்றும் திரு. புபேந்திர யாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

லட்சாபதிபதி பெண்கள் திட்டத்தின் கீழ், இதுவரை ஒரு கோடி பேர் பயனடைந்துள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் Dr. Chandrasekar Pemmasani கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில், மகளிர் சுயஉதவி குழுவினர் உற்பத்தி செய்த பொருட்களின் கண்காட்சியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

3 கோடி லட்சாதிபதி பெண்களை உருவாக்க வேண்டும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இலக்கு விரைவில் எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த கண்காட்சியில், ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களின் கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட சுயஉதவி குழுவினர் இதில் பங்கேற்றுள்ளதாகவும் Chandrasekar Pemmasani தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகிய முன்னாள் அமைச்சர் திரு. Kailash Gahlot இன்று பிஜேபியில் இணைந்தார்.

புதுதில்லியில் பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு.மனோகர்லால் முன்னிலையில் அவர் அக்கட்சியில் இணைந்தார்.

மக்கள் நலனுக்கு எதிராக ஆம் ஆத்மி கட்சி செயல்படவதாகவும், இதன் காரணமாக அக்கட்சியிலிருந்து விலகியதாகவும் திரு. கைலாஷ் கெலாட் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பஞ்சாப் முன்னாள் முதலமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவருமான திரு. Charan Jeet Singh Channi, பெண்கள் மற்றும் சில சமுதாயத்தினருக்கு எதிராக தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக அம்மாநில மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து வழக்கினை பதிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக விளக்கம் அளிக்க நாளை ஆஜராகுமாறு அவருக்கு அம்மாநில மகளிர் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

<<<<<<>>>>>>

தில்லியில் காற்று மாசுபடுவதை கட்டுத்த, தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாநிலங்களின் அரசுகள் உடனடியாக குழுக்களை ஏற்படுத்துமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. Abhay Oka, திரு. Augustine George Masih அமர்வு இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்தும் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காணொலி வாயிலாக பாடங்களை நடத்துமாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டாசு மீதான தடை உத்தரவை தில்லி அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்றும் நீதிபதிகள் அந்த உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

இவ்வழக்கின் விசாரணை வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்களில் மீன்வளத் துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அருணாச்சலப்பிரதேச ஆளுநர் திரு. K.T.Parnaik கூறியுள்ளார்.

Shi Yomi மாவட்டத்தில் மீன் பண்ணையை திறந்து வைத்து அவர் பேசினார்.

மீன்வளத்துறையில் உள்ள வாய்ப்பகளை இளையோர் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மூலம் 6 லட்சத்து 85 ஆயிரத்து 513 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த சனிக்கிழமை அன்று, 2 லட்சத்து 64 ஆயிரத்து 34 விண்ணப்பங்களும், ஞாயிற்றுக்கிழமை அன்று 4 லட்சத்து 21 ஆயிரத்து 479 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டம், பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

குறிப்பாக தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள், இந்த திட்டம் தங்களது மருத்துவ சிகிச்சைக்கு உதவிகரமாக உள்ளது என்று தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 58 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

இலங்கை அதிபர் திரு. Anura Kumara Dissanayake அடுத்த மாதம் அரசுமுறைப் பயணமாக இந்தியா செல்லவுள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Vijitha Herath கூறியுள்ளார்.

இன்று கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் பயணத்தின் போது, பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவித்தார்.

அதிபராக திரு. Anura Kumara Dissanayake பதவியேற்றுக் கொண்ட பின்னர் மேற்கொள்ளும் முதலாவது அரசுமுறை வெளிநாட்டுப் பயணம் இது என்றும் திரு. Vijitha Herath கூறினார்.

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் Climbing சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Joga Purty வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற இப்போட்டியில், 18 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<<>>>>>>

GT ஓபன் வில்வித்தை போட்டியில் இந்தியாவின் அபிஷேக் வர்மா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

லக்ஸம்பர்கில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<<>>>>>>

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அமீர் அலி தலைமையிலான அணியில் Ankit Pal, Rosan Kujur உள்ளிட்ட 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

இந்தியா – மலேசியா இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி இன்று ஹைதராபாதில் நடைபெறுகிறது.

<<<<<<END>>>>>>